1977 ஜூலை 30] [திரு. கு. அ. செங்கோட்டையன்]

ரத்து செய்து இருப்பதை நான் வரவேற்கிறேன் ஏன் என்று சொன்னால், அரிசன மக்கள், பின்தங்கிய மக்கள் அங்கே இருக்கின்றவர்கள் 10 சத வீதம் கூட கிராமப்புறங்களில் இருப்பவர்கள் கல்வி கற்ற நிலையில் இல்லை. அவர்களுக்கு இது வரையிலும் இருந்த அரசாங்கம் தனிக் கவனம் செலுத்தாமல் இருந்ததால் அவர்கள் பின்தங்கிய நிலையிலேயே இருக்கிறார்கள். பின்தங்கிய நிலை என்று சொன்னால். அங்கே இருக்கும் அரிசன மக்கள் எல்லாம் இன்றைய தினம் எந்த அளவுக்கு இருக்கிறார்கள் என்று சொல்லப்போனால், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை எந்த முறையிலும் உயர்த்தாத அளவிற்கு இருக்கிறது. அந்த நிலையை இந்த அரசு மாற்றி அமைக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இப்படிப்பட்ட நல்ல பல திட்டங்களை இருக்கிற நிதிநிலை அறிக்கையில் நம்முடைய அரசு தந்ததற்காக நம்முடைய அரசுக்கும், நிதி அமைச்சருக்கும், என்னுடைய நன்றியை தெரிவித்து வணக்கத்தைக் கூறி விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

(2) அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(இ) எதிர்க்கட்சித் தலைவருக்குச் சலுகைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு கலைஞர் கருணாநிதி அவர்கள் இந்த அவையில் எதிர்க் கட்சித் தலைவராக ஏற்றுக்கொள்ளப் பட்டு, அவ்வாறு இயங்கி வருகிறார். அவருக்கு தமிழ் நாடு உறுப்பினர்கள் சம்பளம் வழங்கும் சட்டத்தின் கீழ் (Tamil Nadu Payment of Salaries Act) உள்ள சலுகைகளுடன், கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன:—

சலுகைகளாவன :

1. ஒரு சுருக்கெழுத்தாளருக்குப் பதிலாக அதை உயர்த்தி ஒரு நிருபரை அவர் கேட்டதற்கு இணங்கக் கொடுக்கப்பட்டுள்ளது

2. ஓர் ஊர்தியும், மாதம் 1-க்கு 100 லிட்டர் பெட்ரோலும் அவ்வூர்திக்கான ஓர் ஓட்டுநரும் கொடுக்கப்பட்டுள்ளது.

3. வீட்டில் ஒரு தொலைபேசியும், தொலைதூர டிரங்க் கால்களுக்கு மாதம் 1-க்கு ரூ. 100-ம் வழங்கப்பட்டுள்ளது.

4. கடைநிலை ஊழியர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளது.

5. கோட்டையில் ஒரு அலுவலக அறை ஒதுக்கப்பட்டுள்ளது.

சம்பள வசதிகளை அவர் 1977-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8-ஆம் தேதி முதல் அதாவது ஆளுநர் உரைக்கான முதல் கூட்டத்திலிருந்து அவர் பெற உரிமை பெறுகிறார் என்றும் அதற்குண்டான உத்திரவுகள் சம்பளம் வழங்கும் அலுவலகத்திற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றது, 1977ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1-ஆம் தேதி திங்கட்கிழமை காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-28க்கு ஒத்திவைக்கப்பட்டது.

(5) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

A. *Statutory Rules and orders.*

13. Notification issued in G.O. Ms. No. 910, Commercial Taxes and Religious Endowments, dated the 13th May 1977 in regard to the exemption in respect of the tax payable by the Victoria Technical Institute, Anna Salai, Madras under the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959) on the sales of goods on order made by the South Korean Ambassador at New Delhi, during his visit to Madras in November 1976, and supplied to him later in March 1977. (Laid on the Table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).

B. *Reports, Notifications and other papers.*

NIL.